
# நாட்டின் சுபீட்சத்திற்கு புதிய பாதை



லெஸ்லி குணவர்தன

329
Gun

லங்கா சமசமாஜக் கட்சியின் பிரசுரம் - 27

329
GOO AK
208

# நாட்டின் சுபீட்சத்திற்கு புதிய பாதை

லெஸ்லி குணவர்தன

## இலங்கை அரசியலில் இன்று தோன்றியுள்ள புதிய நிலைமை

இலங்கையில் ஒரு புதிய நிலைமை உருவாகியுள்ளது என்பதை 1977 ஜூலை மாத தேர்தல் முடிவுகள் தெளிவாக உணர்த்தியுள்ளன. இது நாட்டின் அரசியல் பொருளாதார அமைப்புகளில் மாத்திரம் அன்றி மக்களின் மனோநிலையிலும் மாற்றத்தை உண்டுபண்ணின. இம் மாற்றங்கள் யாவை?

1. லங்கா சமசமாஜக் கட்சிக்கு அதன் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வரும் முதலாவது இலட்சியம், தேசிய சுதந்திரத்தைப் பரிபூரணமாக வென்றெடுப்பதேயாகும். இவ்விலட்சியம் ஏற்கனவே அடையப்பட்டுவிட்டது. பல நெருக்கடி சூழ்ந்த இரண்டாம் உலகப் போரின்போது சுதந்திரத்துக்காக போராடிய ஒரேயொரு கட்சி லங்கா சமசமாஜக் கட்சிதான் என்றபோதிலும், இதற்கான பெருமை அக் கட்சிக்கு கிடைக்கவில்லை. நாடடுக்குச் சுதந்திரம் கேட்டு தனது ஏகாதிபத்திய எஜமானர்களிடம் முழந்தாளில் மண்டியிட்டுச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சிதான் '' ஒரு துளி இரத்தம் சிந்தாமல் 1948 ம் பெப்ரவரி 4 ந் திகதி சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததாக இப்போது பெருமையடிக்கிறது '' ஆனால் 1956 ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம்தான் இலங்கையிலிருந்து பிரித்தானியாவின் இராணுவ தளங்களை அகற்றும்படி கோரியதுடன், அக்கோரிகைக்கு பிரித்தானியாவையும் சம்மதிக்கவைத்தது. அதேபோல் பிரித்தானிய முடியாட்சியுடனான சகல தொடர்புகளையும் துண்டித்து, இந்நாட்டின் பரிபூரண சுதந்திரத்திற்கு அடிகோலியதும் அரசியல் நிர்ணயன சபையொன்றினூல் முறைப்படி நிறைவேற்றப்பட்டதுமான 1972 ம் வருட அரசியலமைப்புச் சட்டம், அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான **கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா** அவர்களினது வழிகாட்டலின் மீதே அமைக்கப்பட்டதென்பதையும் இங்கு குறிப்பிடுவது மிக பொருத்தமாகும். இவ்வாறுகவே ல. ச. ச. கட்சி தனது தலையாய இலட்சியம் ஆன தேச சுதந்திரத்தை ஈடேறச்செய்துள்ளது.

2. லங்கா சமசமாஜக் கட்சியின் இரண்டாவது இலட்சியம், எமது நாட்டில் சோஷலிச ஆட்சிமுறையைத் தாபிப்பதாகும். இவ்விலட்சியத்தை எம்மால் இன்னும் அடைய முடியவில்லை. என்ற போதிலும், இதற்கான பயணப்

ARCHIVES

பாதையில் நாம் பலவெற்றிகளை அடைந்துள்ளோம். பிரபுத்துவ நிர்வாகமுறை அநேகமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. எட்டுமணித்தியாலவேலை உட்பட பல முக்கிய கோரிக்கைகள் பாட்டாளி வர்க்கத்தினால் வென்றெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் பரந்துபட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் தொடர்ச்சியான பல சீர்திருத்த நடவடிக்கை மூலம் வெற்றிகொள்ளப்பட்டுள்ளன.

3. இங்கு விஷேடமாக குறிப்பிடப்படவேண்டிய இன்னொரு விடயமும் உள்ளது. இந்நாட்டின் பிரதானமான உற்பத்தி மூலகங்களாக விளங்கியவை தோட்டத்தொழில் கம்பெனிகளேயாகும். இவற்றில் பிரித்தானியருக்குச் சொந்தமான தோட்ட கம்பனிகளும் அடங்கும். இவையனைத்தும் பிரதானமாக லங்கா சடசமாஜக் கட்சி தலைமையிலான தொழிற் சங்கங்களினாலும் மற்றும் சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கங்களாலும் கொண்டுவரப்பட்ட நெருக்குதல் காரணமாக 1975 ம் ஆண்டில் தேசியமயம் ஆக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட தேசியமயங்களும் தேசியமய நடவடிக்கைகளும் பொருளாதாரத்துறையில் செய்யப்பட்ட அடிப்படை மாற்றங்களாகும். அப்படியிருந்தும்கூட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் 1975-1977 ல் சோஷலிச இலட்சியத்தை நோக்கி நாட்டை வழிநடத்தத் தவறியது ஏன் என்பது வேறொரு விடயமாகும். இவ்வாறு தவறியதனால் ஏற்பட்ட விளைவு என்ன தெரியுமா? சோஷலிசப் பாதையில் நடைபோடவேண்டிய மக்களை அதற்குநேர் எதிரான திசையில் பின்னோக்கி நடக்கச்செய்து இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவ வலையில் வீழ்வதற்கே வழிசெய்துவிட்டது!

4. 1977 ம் வருடத் தேர்தலில் இன்னொரு மாற்றமும் அவதானிக்கப்பட்டது. இந்நாட்டு மக்கள் வலதுசாரித் திசைநோக்கித் திரும்பிய போதிலும் பெரும்பான்மை சமூகத்தினர் ஜாதி, மொழி மத சம்பந்தப்பட்ட குறுகிய போக்கிலிருந்து கணிசமானளவு விலகிநிற்கக் காணப்பட்டனர் ஒரே நாடு என்ற அமைப்புக்குட்பட்டதான இன ஒற்றுமையை அடித்தளமாகக் கொண்டே சோஷலிச சமுதாயமொன்றை வெற்றிகரமாகக் கட்டியெழுப்ப முடியும் என்பதை எண்ணும்போது மேற்சொன்ன முன்னேற்றம் பொதுவாக வரவேற்கத் தக்கதேயாகும்.

5. இன்னொரு குறிப்பிடதக்க முன்னேற்றமும் 1977 ம் வருடத்தேர்தல் முடிவுகளில் வெளியாகியது. மக்களின் அரசியல் மனப்பாங்கினை நிருணயிப்பதில் பொருளாதாரப் பிரச்சினைகளே முக்கிய இடத்தை வகித்தன.

இம்முன்னேற்றம் நம்நாட்டு அரசியலில் இலங்கையில் இடம்பெற்றிராத ஒரு நிலைமையாகும். விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும் முக்கிய பங்கினை ஆற்றியதுடன் அவற்றில், குறிப்பாக விலைவாசி உயர்வுப் பிரச்சினை நாளுக்குநாள் அதிமுக்கிய பங்கினையாக ஆகிவருகிறது.

இலங்கை சமசமாஜக் கட்சியின் இந்த இரண்டாவது இலட்சியத்தை அடைய வேண்டுமானால், மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களை நிறைவேற்றக்கூடிய கொள்கைத் திட்டமொன்று உருவாக்கப்படல் அவசியமாகும். இந்த அதிமுக்கியமான பணியைப் புரிவதற்கு முயலும் ஒரு தீர்மானம் 1979 நவம்பர் 23ந் திகதி கூடிய சமசமாஜக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இப்போது ஏற்பட்டுள்ள புதிய நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசாங்கமொன்றினால் பின்பற்ற வேண்டிய விரிவான வேலைத்திட்டமொன்றை உருவாக்கும் வகையில் இம் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் இன்று எம்மை எதிர்கொள்ளும் மிக முக்கியமானவையும், அடிப்படையானவையுமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான பல நடவடிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. இந்நூலாசிரியரின் முக்கிய நோக்கம் மேற்படி நடவடிக்கைகளில் முக்கியமானவை என தனக்குத் தோன்றும் விடயங்களைத் தெரிவு செய்து அவற்றின் குறிக்கோள்களும் எண்ணங்களும் விரிவாகப்புரியும் வகையில் இங்கு விளங்கப் படுத்துவதேயாகும்.

இதில் முதன்முதலாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பற்றியதாகும். இந்த அரசாங்கம் அதன் முதலாளித்துவப் பாதையில் செல்வதன் மூலம் இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதற்கான வல்லமையைச் சிறிதளவு கூட, வெளிப்படுத்தமுடியாத நிலைமையில் இன்னும் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவ வாதிகளுக்கு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உண்மையான அக்கறையில்லை. வாணிபச் சூதாட்டத்தின் மூலம் குறைந்த காலத்திற்குள் கூடியளவு கொள்ளை லாபம் அடிப்பதே அவர்களது இதய வேட்கையாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தின் ஊழல் நிலவியிருந்திருந்தாலும் அது இப்போது ஆயிரமடங்காக அதிகரித்துள்ளது. யூ. என். பி. யின் முதலாளித்துவவாதிகளில் பெரும்பான்மையானவர்கள் வியாபாரிகள். ஆகவே அவர்களுக்குச் சாதகமான வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதனால் இம்முதலாளித்துவ வாதிகள் இப்போது கோடீஸ்வரர்களாகிவிட்டனர். உள்ளூர் கைத்தொழில் முயற்சிகள் யாவும் முடங்கிவிட்டன. இந்நிலைமையில் விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் உயர்ந்துகொண்டேபோகின்றன. இந்த ஆட்சியின் கீழ், பணக்காரர்கள் நாளுக்குநாள் மேலும் மேலும் பணக்காரர்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். அதேசமயம் அரசாங்கத் திணைக்களங்களிலும் தேசியமயம்

ஆக்கப்பட்ட நிறுவனங்களிலும் யணியாற்றும் சாதாரண ஊழியர்கள் மாத்திரமன்றி அதிகாரிகள் கூட உற்சாகமும் ஊக்கமும் இழந்தவர்களாய். தங்களது பணிகளைச் சரிவர செய்யத் தவறுகின்றனர்.

எவ்வாருயினும் நாம் மேலே குறிப்பிட்டவை எல்லாம் பிரச்சினைகளின் ஒரு பக்கத்தையே காட்டுகின்றன. இவற்றிட்கு மேலாக நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில் உலகின் பொருளாதார நெருக்கடி வெகுவேகமாக விசுவரூபம் எடுத்துக்கொண்டிருக்கிறது. 1972 ஆம் ஆண்டில் முதலாளித்துவ உலகில் பாரிய நாணய நெருக்கடி உருவானது. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் பெரும் உணவுப் பற்ருக்குறை உருவான்தையடுத்து கட்டுப்படுத்த முடியாத பிரச்சனை உண்டானது. இந்தப் பணவீக்கப் பிரச்சனையைச் சமாளிக்கவும் அதன் தாக்கங்களை ஒத்திவைக்கவுமென முதலாளித்துவ நாடுகளும் அவற்றின் தலைமை நாடான அமெரிக்காவும் பதறித்துடித்து காரியங்கள் ஆற்றின. ஆனுல் எண்ணெய் நெருக்கடியாலும் குறிப்பாக ஈரானில் புரட்சி வெடித்து அந்நாடு அமெரிக்காவின் செல்வாக்குப்பிடியைத் தகர்த்தெறிந்து வெளியேறியதாலும் மேற்படி முயற்சிகள் யாவும் பயனற்றுப போயின. இந்நிலைமையில், உலகில் பொருளாதார நெருக்கடி கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு போய்விட்டதென்பதை அமெரிக்க நிபுணர்களே இப்போது ஒப்புக்கொள்கிருர்கள். 1929 ம் ஆண்டில் நடந்ததைப் போல் புதிய பொருளாதார நெருக்கடியின் பாதிப்புகள் முழுவதும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவையும், மூலப்பொருட்களை உடையவையும் பொருளாதார ரீதியில் பலவீனமானவையும் ஆன இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மக்கள் மீதே முதன் முதலில் சுமத்தப்படும்.

அமெரிக்க ஜனுதிபதி காட்டரும், பிரித்தானிய பிரதம மந்திரி தட்சரும் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள தகவல் ஒன்றின், மேற்கு நாடுகளினுல் கடந்த இரண்டு ஆண்டுகளாக யூ. என். பி. அரசாங்கத்துக்கு அளித்து வந்ததைப் போன்ற தாராளக் கடன்களையும் இலவச நன்கொடைகளையும் தொடர்ந்தும் செய்ய முடியாத நிலையை தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடி உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள் என நாம் நம்பகமாக அறிகிரேம். நமது ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவும் நமது நிதிமந்திரி திரு. ரெனி த மெல்லும் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்திகளில் மக்கள் மென்மேலும் சுமைகளைத் தாங்குவதற்குத் தயாராக வேண்டுமெனக் கோரியுள்ளார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியின் சுமைகளைப் பொது மக்களின் மீது சுமத்தும் நடவடிக்கையின் ஆரம்பக்கட்டமாகவே பாண், சீனி, மண்ணெண்ணெய் முதலானவற்றின் விலைகளும் ரவில், பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. உலகப் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகும்போது, சாதாரண மனித்ன் வாழவே முடியாத நிலைமை ஏற்படும். முதலாளித்துவ அமைப்பின் கீழ் மனித சமுதாயத்துக்கு எதிர்காலமே கிடையாதென்று கார்ல் மார்க்ஸ் ஒரு நூற்ருண்டுக்கு முன்னரே தெரிவித்திருந்த இருண்ட தீர்க்கதரிசனம், உண்மையிலேயே நிதர்சனமாகிவிடும்போலிருக்கிறது.

இந்நிலையில் நாம் செய்யக்கூடியதென்ன? தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்குப் பதிலாக, யூ. என். பி. எதிர்ப்பு அரசாங்கமொன்றைப் பதவியில் அமர்த்தி விடுவதன்மூலம் மட்டும் நமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடுமா?

முன்னைய அரசாங்கத்தின் கீழ் வாழ்க்கைச்செலவு இமயமலையின் உச்சிக்கே உயர்ந்துவிட்டதாக முதலைக் கண்ணீர் வடித்த யூ. என். பி. யினர் அதனைத் தரைமட்டத்திற்கு தாழ்த்துகிறோம் என்று உறுதியளித்தபடி 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். இந்தப் பொய் வாக்குறுதிகளை நம்பிய மக்களும் அதன் விளைவை இன்று நேரிடையாக அனுவவிக்கிறார்கள். இப்போது வாழ்க்கைச் செலவு உண்மையிலேயே இமயமலையின் உச்சியையும் கடந்து விண்வெளியையே எட்டிவிட்டது. வேறு வார்த்தைகளில் சொல்வதானல்; மக்கள் தலைவர்களின் பொய் வாக்குறுதிகளை அப்படியே நம்பி மோசம் போகாது, அவ்வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றப் போகிறீர்கள் என்று சம்பந்தப்பட்ட தலைவர்களையே திரும்பிக் கேட்பார்களா?

மக்கள் மறுபடியும் ஏமாற்றப்படுவார்களா அல்லவா என்பதற்கு விடையளிப்பது கஷ்டம். ஆனல் இலவசக் கல்வித் திட்டத்தின் காரணமாக நாட்டில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை 85 சதவீதமாக உள்ளதாலும் விரைவில் 50 வது ஆண்டினைக் கொண்டாடவிருக்கும் சருவசன வாக்குரிமை உடையவர்களாக மக்கள் இருப்பதாலும், நமது நாட்டவர்களை அவ்வளவு சுலபத்தில் தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாதென ஓரளவு ஊகிக்கலாம்.

விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடியதெனத் தாம் கருதும் ஒரு வேலைத்திட்டத்தை லங்கா சமசமாஜக் கட்சி மக்கள் முன் வைத்துள்ளது. யூ.என் பி. அரசாங்கத்தை அகற்றிவிட்டு அதனிடத்தில் மேற்படி வேலைத்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தும்படி அது மக்களைக் கோருகின்றது. சோஷலிசப் பாதையில் முன்செல்லக்கூடிய ஒரு அரசாங்கத்தினல் மட்டுமே அத்தகைய வேலைத்திட்டமொன்றைக் கொண்டு நடத்தக் கூடியதாகவிருக்கும்.

## சுயநிர்வாகம்

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இதனைவிடுத்து வெளிநாட்டு உதவிக்காக எமது நாட்டை அடகு வைப்பதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது. இந்த உண்மையை தாமே ஒப்புக்கொள்ளும் நிலைமைக்கு ஜனதிபதி ஜயவர்த்தன உட்பட யூ. என். பி. தலைவர்கள் எல்லோருமே தள்ளப்பட்டுள்ளார்கள்.

நமது நாட்டில் உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்க முடியும்? எமது நாட்டின் சொத்துக்களில் மூன்றிலிரண்டு பாகம் அரசுத்துறையினலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. எமது உற்பத்தியில் 60 சதவீதம்

பொதுத்துறையினுலேயே உற்பத்தி செய்யப்படுகிறது என்பதனை ஜனுதிபதியே தெரிவித்துள்ளார். ஆகவே, நாம் எமது உற்பத்தியை மேலும் அதிகரிப்பதில் உண்மையிலேயே சிரத்தைக் கொண்டிருப்போமேயானுல், இந்தப் பொதுத்துறையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிகளைக் கண்டறிதல் வேண்டும்.

இவ்விடயத்திற்கு யூ. என். பி. கூறும் பரிகாரம், அரசுத்துறையை தனியார் துறையிடம் தாரைவார்த்துவிடவேண்டும் என்பதாகும்.

தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூறும் பரிகாரம், அந்த நிறுவனங்களில் நிருவாகப் பொறுப்பை தனது அடிவருடிகளிடமும், உறவினர்களிடமும் ஒப்படைத்து, அதன்மூலம் அவர்கள் பொதுப்பணத்தைச் சுரண்டிக்கொடுக்க வழி செய்ய வேண்டும் என்பதேயாகும். ''நாங்கள் திருந்திவிட்டோம்'' என்ற யூ. என். பி. யினர் 1977 தேர்தலுக்கு முன்னர் வாய்ப்பந்தல் போட்டார்கள். அதே மாதிரியாக இப்போது சுதந்திரக் கட்சியினரும் கூறுகிருர்கள். தகுதியற்றவர்கள் பதவிகளில் அமர்த்தப்படமாட்டார்கள் என்று மககளை நம்பச் யெய்வதற்கே சுதந்திரக் கட்சியினர் இப்படிக் கூறுகின்ருர்களா என்று எமக்குத் தெரியவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியும், தேயிலைத் தோட்டங்களிலுள்ள தேயிலைச் செடிகளைப் பிடுங்கிவிட்டு, அவற்றின் இடத்தில் வத்தாளைக் கிழங்கு நடும் தனது முன்னைய கொள்கையை கைவிட்டதுபோல் தெரிகிறது. தங்களது தற்போதைய கொள்கை என்னவென்பது குறித்து அவர்கள் புத்திசாலிதனமான முறையில் மௌனம் சாதிக்கிருர்கள். இவ்விடயமாக இன்று வரையில் திட்டவட்டமான கொள்கையை முன்வைத்துள்ள ஒரேயொரு கட்சி இலங்கை சமசமாஜக் கட்சி மட்டுமேயாகும். தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களிலும் இதர அரசுத் துறைகளிலும் சுய நிர்வாகம் புகுத்தப்பட வேண்டும் என்பதே அக் கொள்கையாகும்.

சுயநிர்வாக முறை, இரண்டு பிரதானமான அம்சங்களைக் கொண்டிருக்கும்.

முதலாவது அம்சம், முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் சம்பந்தப்பட்டதாகும். இது காலவரையில் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களின் நிருவாக சபைகளை, அந்நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களே நியமித்து வந்தார்கள். பெரும்பாலான விடயங்களில் அத்தகைய நிறுவனங்களின் பணிப்பாளர்கள் தாம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைப்பற்றி எதுவுமே அறியாதவர்களாயும், அல்லது தங்களது பதவிகளைப் பயன்படுத்தி பணம் பற்றுகிறவர்களாயும், அல்லது அரசியல் காரணமாகவும், தனிப்பட்ட நலன்கள் காரணமாகவும், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலைப்பிடித்துக் கொடுப்பவர்களாயும் இருந்தனர். இப்படியான நிலைமைகளின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள், முற்ருக முறிந்து விடாமல் திருப்தியற்ற முறையிலாவது இயங்கி வந்ததே பெரிய காரியமாகும்.

ஆயினும், தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்கள் நிருவாகச் சபைக்குத் தகுதியான ஆட்களை நியமிப்பதற்கு அமைச்சர் விசுவாசமான முறையில் முயற்சித்தாலும்கூட, பிரச்சினைக்கு அது சரியான பரிகாரம் ஆகிவிடாது. அத்தகைய பதவிகளுக்கு நேர்மையும், நியாயப் போக்கும் உடையவர்கள் போதியளவு எண்ணிக்கையில் கிடைக்கமாட்டார்கள் என்பது ஒருபுறமிருக்க, ஒருவர் எவ்வளவுதான் நேர்மையானவராக இருந்தாலும், ஏதோ ஒரு கட்டத்தில், ஆசைக்கு ஆளாகமல் இருப்பது அபூர்வமாகும். அத்துடன், நிறுவனங்களில் வேலை செய்யாதவர்களான வெளியாட்கள், அந்நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளால் இலகுவில் பிழையான பாதையில் வழிநடத்தப்படவும் இடமுண்டு. இந்த ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி, ஊழியர்கள் தம்மத்தியிலிருந்து தாமாகவே பணிப்பாளர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

சுய நிருவாக முறையின் கீழ், அத்தகைய தேர்தல்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் கிரமமான இடைவெளிகளில் நடத்தப்படல் வேண்டும். பின்வரும் விடயமும் மனதில் கொள்ளப்படல் வேண்டும்.

பிரதிநிதிகள் அவர்களது பதவி நிலைகளுக்கு (எழுத்தர்கள்; முகாமிகள்; காவலாளர்கள்; ஓட்டுநர்கள்; பொறியியலாளர்கள்; முதலாளிேனார்) ஏற்பவோ அல்லது வேலைக்கூட மட்டத்திலோ தெரிவுசெய்யப்படல் வேண்டும். இதனுல் வாக்காளர்கள், தேர்தலுக்கு நிற்பவர்களின் தகுதி அல்லது தகுதியீனம் குறித்து நேரிடையக அறியும் வாய்ப்பை பெறுகிறுர்கள்.

உயர்மட்ட முகாமைத்துவப் பிரிவினரே; உயர்மட்ட நிருவாக முடிவுகளைச் செய்யவேண்டிய பொறுபுபுடையவர்களாகவும், தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் (டைரக்டர்) சபையின் பணிப்பின் கீழ் வேலை செய்யவேண்டியவர்களாகவும் இருப்பதால், அப்பிரிவினர் இயக்குநர் சபைக்குத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவர்களாதலாகாது.

கிரமமான தேர்தலுக்கென நிருணயிக்கப்பட்ட காலங்களுக்கிடையில் தம்மால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியை திரும்ப அழைக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டா இல்லையா என்னும் பிரச்சினை குறித்து ஏற்ற நேரத்தில் ஆராயப்பட்டு பொருத்தமான தீர்மானத்தை எடுக்க முடியும்.

வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய குழுக்களை வேலைக்கூடத்தின் மட்டத்தில் நியமிக்கும் பிரச்சினையும் ஆழமாகச் சிந்திக்கப்படவேண்டியதொரு பிரச்சினையாகும். அதே மாதிரியாக, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் விடயத்திலும் அதுபோன்ற இதர நிறுவனங்களின் விடயத்திலும், நாடெங்கும் பறவிக்கிடக்கும் பிரிவுகள், வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய தத்தமது சபைகளைத் தெரிவு செய்வதுடன், முழு நிறுவனத்தையும் முகாமைப்படுத்துவதற்காக மத்திய சபையொன்றும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

அதேசமயம், சுயநிர்வாகச்சபைக்குத் (முகாமைத்துவசபை) தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்காக நிருவாகப் போதனையும் நடத்தப்படல்வேண்டும். அத்தகைய சபை உறுப்பினர்களை ஐந்தொகை (கணக்கு) விபரங்களை விளங்கிக்கொள்ளவும், அவற்றை கவனத்தில் எடுத்துக்கொள்ளவும் இயலச் செய்யும் வகையில் கணக்குவைக்கும்முறையிலும் சிறப்பான கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

முகாமை செய்தல், சுய நிர்வாகத்தின் முக்கியமான அம்சம் என்ற போதிலும், அதேயளவு முக்கியமான அம்சமாக நிறுவனத்தின் இலாபத்தைக் கையாளுவதில் சுய நிர்வாகச் சபைக்குள்ள அதிகாரமும் விளங்குகிறது. பொருளளவிலான ஊக்குவிப்பு இல்லாமல், நிறுவனத்தின் ஊழியர்களினது ஆதரவையும், ஒத்துழைப்பையும் குறிப்பாக முகாமைத்துவ சபைக்கு பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்தல் போன்ற விடயத்துக்கு பெறுதல் இயலாத காரியமாகும். பொருளளவிலான ஊக்குவிப்பை அளித்தல் முதலாளித்துவப் போக்கிற்கு வழிவகுப்பதாகும் என்று ஆரம்பக் காலத்தில் கருதிய சில சோஷலிஸ (சமதர்ம) நாடுகள், அதனைத் தவறானக் கருத்தெனக் கண்டு இப்போது கைவிட்டு விட்டதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

மேலும் சுய நிர்வாக முறையின் ஒரு அங்கமான இலாபம் சம்பந்தப்பட்ட மேற்படி கொள்கையை, ஊக்குவிப்பு பற்றிய முறையுடன் சேர்த்து குழப்பிக் கொள்ளலாகாது. ஊக்குவிப்பு முறையை ஒரு தனிப்பட்ட தொழிலாளிக்கோ அல்லது தொழிலாளர்களின் குழுவொன்றுக்கோ ஏற்றதாகும். ஆயினும், சுய நிர்வாக முறைமையில் அடங்கியுள்ள இலாபம் பற்றிய கொள்கை, ஒரு நிறுவனம் முழுவதற்கும் ஏற்புடையதாகும். இலாபம் என்பது, தேறிய இலாபமேயாகும் என்பது தெளிவுப்படுத்தப்படவேண்டும். அதாவது, அரசாங்கத்திற்குச் செலுத்தப்படவேண்டிய வருமானவரியும், மாநில அரசுகளுக்குச் செலுத்தப்படவேண்டிய வரிகளும் கொடுபட்ட பின்னர் மிஞ்சும் தொகையே இலாபம் என இங்கு குறிப்பிடப்படுகிறது. மேற்படி இலாபத்தைப் பயன்படுத்தக்கூடிய மூன்று பிரதான வழிகள் வருமாறு:-

(அ) ஊழியர்கள் மத்தியில் போனஸ் (மிகையூதியம்) என்ற வகையில் பகிரப்படலாம்.

(ஆ) வீடமைப்பு போன்ற சேமநல நடவடிக்கைகளில் செலவழிக்கப்படலாம்.

(இ) நிறுவனத்தின் திறமையை மேலும் வளமாக்குவதற்கோ அல்லது புதிய மூலதன முதலீடு (புதிய இயந்திரங்களைப் புகுத்தல்) என்ற வகையிலோ பயன்படுத்தலாம்.

அதேசமயம், மேலே கூறப்பட்ட மூன்று நோக்கங்களையும் கலந்த வகையிலும் பயன்படுத்தலாம். இவ்விடயம் குறித்து சுயநிர்வாகச் சபை இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் அதுபற்றி ஊழியர்களின் கருத்தை அறிந்துகொள்ளுதல் அவசியம் என்பது கூறாமலேயே விளங்கும்.

இம்முறைமைபற்றி இன்னும் இரண்டொரு விடயங்களைக் கூறல் வேண்டும். முதலாவதாக, இலாபத்தை என்ன செய்தல் வேண்டும் என்பதனைத் தீர்மானித்தல், அப்பொருட்களை உற்பத்தி செய்தவர்களும், அதன்மூலம் இலாபத்துக்குக் காரணமாக விளங்கியவர்களுமான தொழிலாளர்களாகவே இருத்தல் வேண்டும். இலாபத்தில் எந்த அளவு பகுதியை தனிப்பட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது, எந்தளவுத் தேவையை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவது, அதாவது எதிர்கால நன்மைக்காக இன்றைய தேவைகளை எந்தளவுக்குத் தியாகம் செய்வது என்பதனை, எல்லாம் வல்ல அரசாங்கம் தீர்மானிப்பதற்குப் பதில், பொருட்களை உற்பத்தி செய்தவர்களே தீர்மானித்தல் வேண்டும். இத்தகைய கொள்கை சோஷலிஸ இலட்சியங்களுக்கு ஏற்றது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

எதேச்ச அதிகாரிகளைப்பற்றி குறை கூறுதல் எதிர்கட்சியினருக்கு மாத்திரமின்றி அரசாங்கத் தரப்பினருக்கும் இப்பொழுது பழக்கமாகி விட்டது. ஆனால், இதுவரையில் இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணப் படவில்லை. அதிகாரவர்க்கத்தின் துட்பிரயோகங்களை மேல்மட்டத்தில் இருந்துகொண்டு சமாளிக்க முடியாது. கீழ்மட்டச் சமாளிப்பே இதற்கு வழியாகும். இவ்வழி சுய நிர்வாக முறைமையேயாகும்.

சுய நிர்வாக விடயத்தை ஆராய்கையில், இத்துடன் தொடர்புடையதும், லங்கா சமசமாஜக் கட்சியின் யோசனைகளில் அடங்கியுள்ளதுமான இன்னொரு முக்கியமான காரணியையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அரசு நிருவனங்களின் பலவீனமான இயக்கத்துக்கான முக்கியமான காரணங்களில் ஒன்று, அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகிய விடயங்களில் கடைபிடிக்கப்பட்ட தவறான கொள்கையேயாகும். அரசியல் இலாபங்களையும், தனிப்பட்ட நலன்களையும் கருதி இவ்வாறு செய்யப்பட்டன. இவ்விடயங்களில் அரசியல் தலையீடு முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும். நியமனங்களும், பதவி உயர்வுகளும் தகுதி அடிப்படையிலேயே செய்யப்படல் வேண்டும். அத்துடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் இடமாற்ற சபைகளினால், யாவரும் அறிந்த விதிமுறைகளின்படி இடமாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். இத்தகையக் கொள்கைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் மூலமே அரச நிறுவனங்களில் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியும்.

உற்பத்தியை அதிகரித்தால் மட்டுமே விலைவாசியைக் குறைக்க முடியும் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். மூன்றிரண்டு பகுதி உற்பத்தித்துறைகள் அரசுத்துரையிடமே உள்ளன. ஆகவே, இத்துறையின் உற்பத்தியைப் பெருக்குதல் மிக மிக அத்தியாவசியமாகும். இவ்வாறு திருப்திகரமாக உற்பத்தி அதிகரிப்பதால், வாழ்க்கைச் செலவினைக் குறைக்க வழியுண்டு

பொருட்களை நியாயமான விலையில் பாவனையாளருக்கு விற்கக் கூடியதாக இருக்கும். இப்படிச் செய்வதால், வெளிநாட்டுப் பொருட்

களின் விலே காலத்துக்குக்காலம் மாற்றமடைந்தாலும், அது உள்நாட்டு விலேயைப் பாதிக்காது. அத்துடன் அபிவிருத்தி நோக்கங்களுக்கென தாம் வாங்கும் வெளிநாட்டுக் கடன்களின் அளவில் குறைப்பு ஏற்பட்டாலுங்கூட, அதனே, உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பினுல் உண்டாகும் இலாபத்தைக்கொண்டு சரிகட்டிவிடலாம்.

அரசுத்துறைகளில் செயலாக்கத்தக்க இன்னெரு விதமான சுய நிர்வாக முறையையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். தேசியமய நடவடிக்கைகள் தோற்றுவிட்டன. அதனுல் உற்பத்தி அதிகரிக்கவில்லே என்று முதலாளித்துவ மனப்பான்மையுடையவர்கள் அடிக்கடி குறை கூறுகிருர்கள். தேசியமயங்கள் எதிர்பார்த்த பயனே அளிக்கவில்லே என்பதனே இடதுசாரிகளும் ஒப்புக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர். தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களின அதிகாரப் பொறுப்பு சுயநல அரசியல்வாதிகளிடமும், அடிவருடிகளிடமும், அதிகாரவர்க்கத்திடமும் ஒப்படைக்கப்பட்ட நிலேயில், பாடுபட்டுழைக்கும் பாட்டாளி வர்க்கம் அந்நிறுவனத்தின் வெற்றியினுல் தங்களுக்கு எவ்வித பயனும் இல்லேயெனக்கண்டு ஒதுங்கிவிட்டமையே மேற்படி தோல்விக்குக் காரணமாகும். இந்நிலேமையை மாற்றவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. இம்மாற்றமானது முதலாளித்துவ தனியுடைமையை கருத்திற்கொண்டு பின்னேக்கிச் செல்வதாக இல்லாமல், சுயநிர்வாக முறைமை மூலம் முன்னேக்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

## III

### சுய நிர்வாகத்தின் கீழ் எழும் சில பிரச்சினைகள்!

யூகோசெலவியா நாட்டில் சட்டங்களே நிறைவேற்றுவதன் மூலம் விளேவு பெருக்கந்தரும் நிருவனங்களில் சுயநிர்வாக பழக்கத்தை ஒழுங்குபடுத்துவது பற்றியும் எல்லா அதிகாரங்களேயும் தொழிலாளர் பிரதிநிதிகளிடமே ஒப்படைப்பது பற்றியும் எண்ணப்பட்டபோது, ஆளும் வட்டாரம் உட்பட பொதுவாகவே ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது, அபிவிருத்திக்கென எதனேயும் ஒதுக்கி வைக்காமல், உபரி உற்பத்தி முழுவதையும் தொழிலாளர்களே பாவித்துவிடமாட்டார்களா என்பதே அந்தச் சந்தேகமாகும். ஆயினும், தொழிலாளர்மீது நம்பிக்கைவைத்து, சுயநிர்வாக முறையை நிதர்சனமாக்கும் வகையில் முழு அதிகாரங்களேயும் அவர்களிடமே ஒப்படைப்பதென பின்னர் தீர்மானிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட அச்சங்கள் தவருனவை என்பது பின்னர் அனுபவத்தில் கண்டறியப்பட்டது. ஆரம்பகாலத்தில் ஒரு சில தாபனங்களில் இயங்கிய தொழிலாளர் சபைகள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டன. ஆனுல் பெரும்பாலான தாபனங்களேச் சேர்ந்த தொழிலாளர் சபைகள் அபிவிருத்திக்கும் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்த பின்னரே சொந்தப் பாவனேக்கு உபரியைப் பயன்படுத்தினர்.

யூகோசெலவியாவில் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் காணப்பட்ட உயரியமட்டத்திலான புரட்சிகர மனப்பான்மை மிகுந்த

ஒரு அனுபவம் இலங்கையில் இல்லையென்றபோதிலும், இங்குள்ள கல்வி யறிவின் அளவையும், நீண்டகால வாக்குரிமை அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது, இலங்கைக்கு கூடுதலான அனுகூலங்கள் உண்டு என்றே கூறவேண்டும். ஆகவே, எமது நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு சுயநிர்வாகமுறைமை அளிக்கப்படுமாயின், தாம் பணிபுரியும் நிறுவனங்களின் உபரி உற்பத்தியிலும், இலாபவிடயத்திலும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வார்கள் என்று சொல்வதற்கில்லை.

கேள்விப்பத்திரங்களை (டெண்டர்களை) அளித்தல் தொடர்பான அதிகாரங்கள், அமைச்சர்களினல் நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் சபையிடமே இப்போது உள்ளன. இதனை மாற்றி, இப்பொறுப்பை தொழிலாளர் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தால், அவர்கள் அவற்றை துட்பிரயோகம் செய்துவிடுவார்கள் என்று சுயநிர்வாகத்திற்கு எதிராக இலங்கையில் முன்வைக்கப்படும் சந்தேகங்களில் ஒன்றுகும். இவ்விடயத்தில் அமைச்சர்களினல் நியமிக்கப்படும் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே ஏழைகளைவிட நேர்மையானவர்கள் என்ற போலி வாதத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விவகாரத்தின் தற்போதைய முடிவு என்னவெனில், நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்கும் இயல்பு பணக்காரவர்க்கத்திற்கே ஏகோபித்த உரிமை என்ற தப்பான அபிப்பிராயத்தை வளர்ப்பதாகும். உண்மை இதற்கு நேர்மாறனதாகும். இயக்குநர் சபையிலுள்ள தொழிலாளர் பிரதிநிதிகளோ தாம் பணியாற்றும் நிறுவனத்தில் நாளாந்தம் தொடர்புகொள்ளும் சக தொழிலாளர்களினலேயே தெரிவு செய்யப்படுவார்கள். அதே சமயம், அமைச்சர்களினல் நியமிக்கப்படுகிறவர்கள் அதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குத் துதிபாடி அதன் மூலமே அப்பதவியை அடைகிருர்கள். இவ்விரு பகுதியினரில் யார் உண்மையிலேயே நேர்மையாக நடப்பார் என்பது சொல்லித் தெரியவெண்டிய விடயமல்ல.

சுயநிர்வாகம் நடைபெறும் நிறுவனம் தொடர்பில் எழக்கூடிய ஒரு பிரச்சினை உண்டு. அந்நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிஞல் என்ன செய்வது? அப்படியான நிலையில், அரசாங்கம் நிபுணர் குழுவொன்றை நியமித்து, நட்டத்திற்கான காரணங்களை அறிந்து, அதனை இலாபகரமாக இயங்குவதற்கு வழிகாண திருத்தியமைக்கவேண்டும். இப்படியும் தீர்வு காணப்படாவிடின், அந்நிறுவனத்தை மூடிவிட்டு, அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மாற்றுவேலைகளை ஒழுங்கு செய்வதைத்தவிர வேறுவழி கிடையாது. அதே சமயம், சம்பந்தப்பட்ட நிறுவனம் அத்தியவசியமானதென அரசாங்கம் கருதுமாயின், தாமே நட்டத்தை ஏற்றுக்கொண்டு உசிதமான மான்யங்களின்மூலம் அதனைத் தொடர்ந்து நடத்தலாம்.

சுயநிர்வாக நிறுவனங்கள் விடயத்தில் எழக்கூடிய இன்னெரு பிரச்சினை, வருமானவரி விதித்தல் பற்றியதாகும். தனியார் விடயத்

திலும், தனியார் நிறுவனங்களிடத்திலும் விதிக்கப்படுவதுபோன்ற அதே மாதிரியான வருமானவரியை இவை சம்பந்தமாகப் பின்பற்ற இயலாது. அப்படியாயின் எவ்வகையில் இவற்றில் வருமானவரியைக் கணக்கிடுவது?

செலுத்தப்படவேண்டிய வருமானத்தைக் கணக்கிடுவதற்கு வருமான அளவை முழு அடிப்படையாக்கிக்கொள்ள முடியாது. இவ்விடயத்தில் நமக்கு ஏற்கனவே ஓரளவு அனுபவம் உள்ளது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் காலத்தில், இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு, டிப்போக்கள் பணியாற்றிய திறமைக்கேற்ப கூடிய அல்லது குறைந்த மிகையூதியம் வழங்கப்பட்டபோது, ஒவ்வொரு டிப்போவிலும் ஈட்டப்பட்ட இலாபத்தின் அளவைக்கொண்டு அது பணியாற்றிய திறமையை மதிப்பிட முடியாதென்பது தெளிவாகியது. ஏனெனில் சில டிப்போக்களுக்கு உட்பட்ட பஸ் போக்குவரத்துப் பாதைகள் கூடுதல் வருமானமும், வேறு சில டிப்போக்களுக்கு உட்பட்ட பாதைகள் குறைந்த வருமானமும் தரக்கூடியனவாய் இருந்தன. அதேசமயம் சில டிப்போக்களில் பழைய பஸ்கள் அதிகளவில் இருந்தபடியால், பராமரிப்புக்கென அவை கூடுதலாகச் செலவிட்டன. மற்றும் சில டிப்போக்களில் புதிய பஸ்கள் இருந்தபடியால் அவற்றில் பராமரிப்புச் செலவு குறைந்திருந்தது. ஆகவே, டிப்போ ஊழியர்களுக்கு மிகையூதியம் கொடுபடும்போது, இலாபத்தின் அளவை மட்டுமே கருத்திற் கொள்ளாமல், மேற்சொன்ன அம்சங்களையும் கவனித்தல் வேண்டும். இலாபத்தைக் கணக்கிடுவதற்கு முன்னர், கடன்தீர் நிதி போன்றவாறனவற்றின் கொடுப்பனவுகளைக் கழித்தல் வேண்டுமென்பது கூறாமலே விளங்கும்.

சுய நிர்வாக நிருவனங்களின் மீது விதிக்கப்பட வேண்டியதான வருமான வரியைக் கணக்கிடுவதற்கு முன்னர், இயல்பான அனுகூலங்களையும் கவனத்திற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் பாதிக்கப்படும் அதேவேளையில், வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கூடுதல் அனுகூலம் பெறுவதைத் தவிர்ப்பதற்கும் இவ்வாறு செய்தல் அவசியமாகும். இது தோட்டத்துறைக்கும் ஏற்றது ஆகும். ஏனெனில் ஒவ்வொரு தோட்டமும் அடையும் இலாபம் அதன் சீதோஷனவிடத்தைப் பொறுத்ததாகவே இருக்கும்.

இறுதியாக, கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய இன்னொரு விடயமும் உண்டு. சுய நிர்வாக நிறுவனங்களின் மீது வருமான வரி விதிக்கையில், பொறித்தொகுதி போன்ற நிலையான மூலதனத்தின்மீது செலவிடப்படும் நிதியின் அளவும், சம்பள வகையில் செலவிடப்படும் நிதியின் அளவும் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். இதில் பொதுவானதொரு கொள்கையாக, பொறித்தொகுதி முதலானவற்றில் முதலீடு செய்யப்பட்ட தொகை கூடுதலாக இருக்குமாயின், வருமானவரி உயர்வானதாயும், அதேசமயம் சம்பளக் கொடுப்பனவு வகையில் கூடுதலாகச் செலவழிக்கப்பட்டிருக்குமாயின், வருமானவரி குறைவானதாயும் இருத்தல் வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோல், சுய நிர்வாக நிறுவனங்கள் தங்களது இலாபத்திலிருந்து உள்ளூர் அதிகாரச் சபைகளுக்கோ அல்லது பிரஜா சபைகளுக்கோ விதிக்கப்படும் வரியைச் செலுத்துபவையாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும், சுய நிர்வாகமுறை யின் கீழ், அவ்வாறன நிறுவனங்களுக்கிடையில் போட்டி இருக்குமாதலால், பாவனையாளர்களும் நியாயமான விலையில் உற்பத்திப்பொருட்களை வாங்கக்கூடியதாக இருக்கும். இப்

போட்டி காரணமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் தமது உற்பத்தியின் தரத்தை உயர்த்தவும், விலையைக் குறைக்கவும் பாடுபடும்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட சுய நிர்வாக நிறுவனமே ஏகபோகம் அனுபவிக்குமாயின், கூடுதல் திறமையின்மூலம் இலாபத்தைப் பெறுக்குவதற்குப்பதில் விலையேற்றத்தின் மூலமே கூடுதல் இலாபத்தைப் பெற முயலக்கூடிய ஆபத்தும் உண்டு. இதனால் பாவனையாளர்கள் அநியாயமான முறையில் சுரண்டப்படுவதற்கு வழியேற்படும். இப்படியான சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தலையிட்டு விலைக்கட்டுப்பாடு போன்ற முறைமை எதனையும் புகுத்தல் வேண்டும்.

சுய நிர்வாகம் காரணமாக அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நிலைகுலையக்கூடுமென்பது அதற்கெதிராகக் கூறப்படும் இன்னொரு குற்றச்சாட்டுதலாகும். அப்படியானதொரு நிலைமையைத் திருத்துவதற்குச் சாத்தியமான வழிகள் எத்தனையோ உண்டு. அவற்றைக் கருத்திற்கொள்ளாமல், மேற்சொன்ன கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுய நிர்வாக நிறுவனங்களினால் மட்டுமல்லாமல் அரசாங்கத்தினாலும், புதிய முதலீடுகள் செய்யப்படுவதுண்டு. உண்மையில் அரசாங்கத்தினால் செய்யப்படும் முதலீடே அளவில் கூடுதலானதாகும். அத்துடன் சுய நிர்வாகம் நடைபெறும் நிறுவனங்களினால், அபிவிருத்தியோ, முன்னேற்றமோ செய்யப்படுகையில் அல்லது புதிய நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுகையில் அவை வங்கிகளிடமிருந்து கடன் பெறவும், அவசியமாகிறது. வங்கிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதால், அத்தகைய புதிய முதலீடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமையும் இயல்பாகவே உண்டாகிறது. ஆகவே, அரசாங்கத்தின் பொதுவான அபிவிருத்தித் திட்டங்களை நிலைகுலையச் செய்யும் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமல் தடுத்தல் வங்கிகளுக்குச் சாத்தியமாகிறது.

அத்துடன் மேற்சொன்னவாறான சுய நிர்வாக முறையினால் தொழிற்சங்க அமைப்புகளுக்கு பலத்த வீழ்ச்சியுண்டாகுமெனக் கூறப்படும், அச்சமும் ஆதாரமற்றதாகும். சுய நிர்வாக முறையின் கீழ் தொழிற்சங்க அமைப்புகளின தேவை இருந்தேவரும். பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த ஊழியர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களைக் கொண்டே இயக்குநர் சபைகள் நிறுவப்படும், என்றபோதிலும், அச்சபைகளுடன் ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தற்போதிருப்பது போன்ற தொழிற்சங்க அமைப்புகளுக்குத் தேவை இருக்கவே செய்யும். அத்துடன் தங்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபைகளிடமிருந்தே ஊழியர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கத் தொழிற்சங்கங்கள் முன்வரவேண்டிய சந்தர்ப்பங்களும் எழவே செய்யும். ஆகவே, இத்தகைய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காகமட்டுமல்லாமல் தேவையுமானால் வேலைநிறுத்தங்களைச் செய்யவும் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் இருத்தல் அவசியமாகின்றது.

சுய நிர்வாக முறையின் கீழ் பிரச்சினைகளே தலைதூக்காது என்று நாம் கூறவில்லை. இதில் முக்கியமான விடயம் யாதெனில், பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை அடக்குவதற்கோ, மறைப்பதற்கோ முயலாமல், தீர்ப்பதற்கு முன்வரல் வேண்டும்.

சுய நிர்வாக முறையின், கீழான அபிவிருத்தியின் வினைவுகளில் ஒன்று மக்கள் பிரிவின் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் சமத்துவ

மின்மை வளரக் கூடும் என்பதனை நாம் வெளிப்படையாக ஒப்புக் கொள்ள வேண்டும். அரசாங்கம் மேல்மட்டத்திலிருந்து உறுதியான கட்டுப்பாட்டை மேற்கொள்ளாவிடில், மேற்கண்டவாறு ஏற்படுதல் சாத்தியமே. குறிப்பாக, அபிவிருத்தியடைந்த பகுதிகளில் செய்யப்படும், மூலதனத்திலிருந்து கூடுதலான இலாப விளைவுகளும், அபிவிருத்திகுன்றிய பிரதேசங்களிலிருந்து குறைந்த இலாப விளைவுகளும் உண்டாவதால், இவ்விரண்டு பகுதிகளுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு தொடர்ந்து அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. இத்தகைய எல்லா பிரச்சினைகளும் சுயநிர்வாக முறைமையிடம் தக்கத்தீர்வு தயாராக உள்ளதெனச் சொல்வதற்கில்லை. இந்த ஒரு பிரச்சினைக்கு இன்னும் சரியான பரிகாரமும் காணப்படவுமில்லை. ஆனால் அரசு அதிகாரம் மக்கள் கையிலேயே இருப்பதன் காரணமாக, மேற் சொன்னவாறான பிரச்சினைகள் தலைதூக்கும் போதெல்லாம் அரசின் தலையீடு மூலம் அவற்றிற்குப் பரிகாரம் காணக்கூடிய வாய்ப்பு இருக்கவே செய்கிறது.

அதேசமயம், சுய நிர்வாக முறைமையை எமது நாட்டில் புகுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் எதுவாக இருப்பினும், நிச்சயமாக அவையெல்லாம் இரண்டாம் பட்சமானவை தான். ஏனெனில் இலங்கை மக்கள் அனைவரினதும் ஆதரவையும், அபிலாசைகளையும் ஒன்று திரட்டுவதன்மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விளைவாசியைக் குறைப்பதற்கும் இதனைத்தவிர வேறு மார்க்கமே கிடையாதென்பதனைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## IV

### வேலையில்லாப் பிரச்சினையும் — பிரஜா சபைகளும்

சுய நிர்வாக முறையை உட்புகுத்துவதன் மூலம், இலங்கையின் பொருளாதாரத்தில் மூன்றிலிரண்டு பகுதியை அடையக்கூடிய கணிசமான அதிகரிப்பு பற்றி நாம் ஏற்கனவே விபரித்துள்ளோம். ஆனால் எஞ்சிய துறைகளிலும் உற்பத்தியை அதிகரித்தல் வேண்டும். இத்துறையில், எதிர்கால அபிவிருத்திக்காக அரசு, ஆரம்பித்துள்ள புதிய திட்டங்களும், தனியார் துறையும், இதில் குறிப்பாக விவசாயிகளும் சிறு உற்பத்தியாளர்களும், கமத்தொழிலும், கைத்தொழிலும் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், பிரஜா சபைகளினால் நடத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களும் அடங்கும்.

பிரஜா சபைகளை அமைப்பதன் பிரதான நோக்கம், குறிப்பாகக் கிராமப்புரங்களில் மக்களைக் கொண்டே நிறுவப்படும் அமைப்புகளிடம் அதிகாரத்தைப் பரவலாக்குவதேயாகும். வேறொரு கோணத்தில் பார்ப்போமேயாயின், சுய நிர்வாகக் கொள்கையை இன்னொரு துறையில் புகுத்தும் முயற்சியேயாகும்.

ஒரு கிராம சபைக்கு உட்பட்ட அதேயளவு பிரதேசம் பிரஜா சபைக்கும் உட்பட்டதாயிருத்தல் வேண்டும். இன்று கிராம சபைகளுக்கு உறுபினர்கள் தெரிவு செய்யப்படுவது போன்ற அதேமாதிரியான பிரதேச அடிப்படையிலேயே பிரஜா சபைகளின் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். அத்தகைய உறுப்பினர்களை பிரதேசஅடிப்படையில் அல்லாமல், பாவனையாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் ஒவ்வொரு விற்பனை நிலையத்தின் உறுப்பாண்மை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுதல் பயனுள்ள புதுமையாகவிருக்கும். இதனால், தற்போது தனது பிரதேச விவகாரங்களை மட்டுமே கவனித்துவரும் கிராமசபை உறுப்பினர் ஒருவர், உள்ளூர் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மூலம் சாமான்கள்

விநியோகிக்கப்படுதல் பற்றிய பிரச்சினைகளையும் கவனிக்கக் கூடியதாக விருக்கும்.

திறமையற்றவர்களையும், ஊழல் பேர்வழிகளையும் களைப்பிடுங்கத் தக்க வகையில் உறுப்பினர்களின் தேர்தல் ஆண்டுதோறும் நடத்தப்படுதல் பயனுள்ளதாகும்.

மேற் சொன்னவாறு தெரிவு செய்யப்படுபவர்களுடன் சேர்த்து உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளும், கமத்தொழில் கழங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் பிரஜா சபைகளில் உறுப்பினராதல் வேண்டும். பிரஜா சபையின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஒருவர், மாநகர சபையின் மேயரைப்போன்ற நிலையில் இருப்பார். தலைவர் கொள்கை ரீதியிலான முடிவுகளைச் செய்வார். இதனைக் காரியாதிகாரி தரத்திலான ஒரு அதிகாரி நிறைவேற்றுவார். இப்போது இக்காரியங்கள் மேயரினல் மாநகர ஆளுநரினுலும் செய்யப்படுகிறது தெரிந்ததே. தற்போது மத்திய அரசாங்கத்திடம் குவிந்துள்ள பணிகளான ஆதாரக்கல்வி; அடிப்படை சுகாதாரச் சேவைகள், கமத்தொழில்கள் கழகங்கள் என்பன பிரஜா சபைகளிடம் விடப்படும். அப்பிரதேசத்திலுள்ள, உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களும், உள்ளூர் அபிவிருத்திச்சங்கங்களும் உட்பட அனைத்துக் கூட்டுறவுச்சங்கங்களும் பிரஜா சபைகளிடம் ஒப்படைக்கப்படக்கூடும்.

உள்ளூராட்சி சபைகளின், வரிவிதிப்பு அதிகாரம் தற்போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய உள்ளூரதிகார சபைகளின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள பிரஜா சபைகளுக்கு அப்பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள் மீது வரி விதிப்பது உட்பட இன்னும் விரிவான வரிவிதிப்பு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

பல்வேறு பிரஜா மன்றங்களையும் ஒன்றிணைத்து மாவட்ட சபை ஒன்றை அமைக்கலாம் அதேசமயம், அருகருகேயுள்ள இரண்டு மாவட்ட சபைகளைச் சேர்ந்த மக்கள் விரும்புவார்களெனின், பிராந்திய சபையொன்றை அமைப்பதற்கு அவர்களை அனுமதிக்கலாம். இதனுல், கூடுதல் திறமையுடனும், ஒத்துழைப்போடும் கருமங்களைக் கொண்டு நடத்துவதற்கு வழியேற்படும்.

பிரஜா மன்றங்கள் தத்தமது பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டுமென ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். இப் பணியைத் திறம்படக் கொண்டு நடத்தும் வகையில் காணிகளைக் கையேற்கும் அதிகாரம் அவற்றிற்கு இருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்த்தலே அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதானமான நோக்கமாகயிருத்தல் வேண்டும்.

பிரஜா மன்றங்களின் அபிவிருதித் திட்டங்கள் மூலமாகவும், தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களின் விரிவாக்கல் திட்டங்கள் மூலமாகவும் ஓரளவு கூடுதலான வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடியதாகவிருக்கும். ஆயினும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் பெறும் பொறுப்பு, அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களிலேயே தங்கியுள்ளது. கமத்தொழில், கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் இதனைச் சாதித்தல் வேண்டும்.

ஒரு பொருளாதாரத் திட்டம் வெற்றிபெறவேண்டுமானுல் பின் வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும். முதலாவதாக; 1974 ஆம் ஆண்டு, அப்போதைய நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா தனது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டது போல், நமது நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கும் 40 குடும்பங்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுத்தல் மிக அவசியமாகும். இன்றே, இப்போதைய யூ. என். பி. அரசின் கீழ் தலைதூக்கியுள்ள கோடீஸ்வரர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இல்லாவிடில் இவர்களினுல் இந்நாட்டின் அபிவிருத்திக்கான பொருளாதாரத் திட்டங்களைச் சீர்குலைத்து நாசப்படுத்தும் செயல்களை எந்தவொரு அரசாங்கத்தினுலும் தடுக்கமுடியாது. உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளித்துவச் சக்திகளின் செல்வாக்கினையும், நெருக்குதலையும் தைரியத்துடன் எதிர்த்து நிற்கக்கூடிய அரசாங்கம் ஒன்றினுல் மட்டுமே, தேசிய அபிவிருத்திக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குமான ஒரு திட்டத்தை வகுத்து நிறைவேற்ற முடியும்.

முதலாளித்துவக் கோடீஸ்வரர்கள் தலைதூக்குவதற்கு அனுமதிக்காத, அதேசமயத்தில் அரசாங்கம், நாட்டில் சிறு உற்பத்தியாளர்களின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும். அத்துடன் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் தொழில் வாய்ப்பினை அதிகரிக்கும் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கவும் வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் இன்னெரு முக்கியமான விடயம் மிகவும் முக்கியமாகும். அதாவது நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களை பலவகைப்படுத்துவதன்மூலம், எமது அந்நியச் செலவாணித் தேவைக்குத் தேயிலையையும் மற்றும் தெங்கு, இறப்பர் பொருட்களை மட்டுமே நம்பியிருக்கும் நிலையை மாற்றவும் வேண்டும். கலாநிதி என். எம். பேரேரா, நிதியமைச்சராக இருந்த சமயத்தில் பாரம்பரிய மற்ற பொருட்களின் ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தார். இதன்மூலம் ஏற்றுமதி வருவாயை 28 சதவீதம் அதிகரிக்கவும் செய்தார்.

## கமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சுயநிர்வாக முறையின் ஜனநாயகப் பண்புகள்

கமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பிரஜா மன்றங்களின் கீழேயே வரும் என்பதால், இவைபற்றி இன்னும் விரிவாக ஆராய்தல் பயனளிப்பதாக இருக்கும்.

கைத்தொழில் துறையைப்போன்றில்லாமல், கமத்தொழில் துறை சோஷலிஸ நாடுகளுக்கு சில பிரச்சினைகளை உண்டுபண்ணியுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள. இவற்றில் முக்கியமானது கமத்தொழில் துறையில் முதலீடுவதற்கு போதியளவு மூலதனம் இல்லாதிருப்பதேயாகும்.

அமெரிக்கா நாட்டில்தான் கமத்தொழில் துறையில் ஆகக்கூடியளவிலான விளைவுப் பெருக்கம் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் பெரியளவிலான மூலதனம் அத்துறையில் முடக்கப்பட்டுள்ளதேயாகும்.

உதாரணமாக இங்கு இயந்திரக் கருவிகளில் பெருமளவும் பணம் முதலிடப்படுகிறது. இதனுல், ஒரு கணவன், மனைவி இரண்டு தொழிலாளர்களைக் கொண்ட ஒரு விவசாயக் குடும்பம் நூற்றுக்கணக்கான ஏக்கர்

பரப்பளவிலான காணியில் உற்பத்தி செய்யவும், ஆகக்கூடிய விளைச்சலைப் பெறவும் வழியேற்படுகிறது.

ஆனால், சோஷலிஸ நாடுகளில் நிலைமை வேறாகும். விவசாயிகளை, அவர்களது காணிகளை எல்லாம் ஒன்றுபடுத்தி கூட்டுப்பண்ணை முறையில் பயிரிடச்செய்யும் முயற்சிகள் சோஷலிஸ நாடுகளில் வெற்றியடைய வில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. விவசாயிகள் தங்களது காணித்துண்டுகள் மீது இயற்கையாகவே வைத்திருக்கும் ஒருவிதபற்றுணர்வு, கூட்டுப்பண்ணைகளில் புரியப்பட்ட வேலைக்குப் பதிலாக அங்கு தங்கியிருந்த நாட்களில் அடிப்படையிலேயே வழங்கப்படும் ஊதியம் குறிப்பிட்டசில பயிர்களில் மட்டுமே விசேட அக்கறை காட்டத்தவறுதல் ஆகியன இக்காரணங்களாகும். ஆனால் பிரதானமான காரணம் மூலதனப் பற்றாக்குறையேயாகும்.

சோஷலிஸ சமுதாயமாற்றம் இதுவரையில் அபிவிருத்திகுன்றிய நாடுகளிலேயே (கிழக்கு ஜெர்மனியும் செக்கோசெலவாக்கியாவும் விதிவிலக்கானவை) இடம்பெற்றுள்ளதால், வளர்ச்சிகுன்றிய அவற்றின் கைத்தொழில் துறையைக்கொண்டு விவசாயத்துறையை முற்றிலும் இயந்திரமயமாக்க முடியாதுள்ளது. கைத்தொழில் துறையில் மாத்திரமின்றி விவசாயத்துறையிலும் உற்பத்திக் கருவிகள் யாவும் பொதுச் சொத்தாக மாறக்கூடிய ஒரு முறை இறுதியில் ஏற்படவேண்டும் என்பதே மார்க்கியத்தின் இலட்சியமாகும்.

இக் கோட்பாடு காரணமாக, உற்சாகம் மிகுந்த கொள்கைவாதிகள் சிலர், நடைமுறை நிலைமைகளை உணராத இலட்சிய வேட்கை கொண்டவர்களாய், கூட்டுப்பண்ணை முறையை நேரடியாகவே உட்புகுத்துவதன் மூலம் பின்தங்கிய நாடுகளில் கூட சோஷலிஸ சமுதாய மாற்றத்தை உண்டுபண்ணிவிட முடியும் என்று எண்ணுகிறார்கள். இடதுசாரி கம்யூனிசத்தைப் போலவே இதனையும் ஒரு குழந்தைத்தனமான கோளாறு என்றே குறிப்பிட வேண்டும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி குன்றிய நாடுகளில், விவசாயத்தைக் கூட்டுப்பண்ணை முறையின் கீழ் கொண்டுவருவதற்கு சில காலம் ஆகும் என்ற உண்மையை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்ள வேண்டும். இதற்கு இடைப்பட்ட காலத்தில், மிகவும் கீழ் மட்டத்தில், அதாவது கூட்டுறவுச்சங்க முறைகளின் கீழ் ஆரம்பித்து, படிப்படியாகவும் சிறிதுசிறிதாகவுமே அவர்களை சுயமுகாமைத்துவ முறைக்குப் பழக்கியெடுக்க வேண்டும்.

இலங்கையில் செய்ய வேண்டிய முதல் பணி விவசாயிகளை சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் ஒன்றுபடுத்துவதேயாகும். பொருத்தமான பயிர்ச்செய்கைக் குறித்து ஆலோசனையளித்தல், நியாயமான கட்டணங்களில் டிராக்டர்களை வாடகைக்கு விடல், கடனுக்குப் பசளையும், விதைகளும் அளித்தல், விளைச்சலுக்கு உத்தரவாத விலை ஏற்படுத்தல் என்ற வகையில் இச் சங்கங்கள் உதவி புரியலாம். சேவைக் கூட்டுறவு முறையின் கீழ் விவசாயி தனது காணியில் கூட்டாக விவசாயம் செய்யமாட்டார்; அவரது காணியில் அவரே பயிர் செய்வார். இதனால் இரண்டுவித நன்மைகள் உண்டு.

முதலாவதாக, தனது காணிக்கு தானே எஜமான் என்ற வகையிலான விவசாயின் பாரம்பரிய பற்றுணர்வுக்கு எவ்வித பங்கமும் நேராது. இரண்டாவதாக, கூட்டுப்பண்ணையில்போல் அல்லாமல் தனது சொந்தக் காணியில் தானே கூடுதல் அக்கறையுடன் வேலை செய்வதால், மூலதனப்

பற்ருக்குறையினுல் ஏற்படும் பாதிப்பு ஓரளவு நிவர்த்திக்கப்படுகிறது. இறுதியாக இன்னெரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் கூட விவசாயிகள் பலவந்தத்தின் பேரில் அல்லாமல் சொந்த விருப்பத்துடன் சேருவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

சுய நிர்வாக (முகாமைத்துவ) முறையின் முற்போக்கான விளைவுகளில் ஒன்று, நாளாந்த ஜனநாயக ரீதியிலான இயக்கத்துக்கு கீழ்மட்டத்திலேயே வித்திடப்படுவதாகும். ஆனுல், இதன் காரணமாக மட்டும் நாடளாவிய ஜனநாயக அரசியல்முறை ஏற்பட்டுவிடமாட்டாது. வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரத் திட்டமிடல் போன்ற அதிமுக்கியமான விடயங்களில் சுய நிர்வாக நிறுவனங்களுக்குப்பதில் மத்திய அரசாங்கமே முடிவுகளைச் செய்தல் வேண்டும்.

என்னமாதிரியான அரசியல் முறை தயாரிக்கப்பட வேண்டும்' என்ற பிரச்சினைக்கு சோஷலிஸ நாடுகளின் அனுபவம் பக்கபலமாக இருக்கும். இன்னெரு விடயத்தையும் நாம் மறந்துவிடலாகாது. இன்றைய சோஷலிச நாடுகள் எல்லாமே ஜனநாயக அரசியல் நடவடிக்கைகள் பற்றி கடந்த காலத்தில் எவ்வித அனுபவமும் பெற்றவையல்ல. அத்துடன் அவை பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய நாடுகளாகவே இருந்தன. ஆனுல், முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்தமட்டில், அவற்றின் அரசியல்முறை வளர்ச்சி பல நூற்ருண்டுகளுக்கு மேற்பட்டதாகும். முதலாளித்துவ நாடுகளில் அடையப்பட்டுள்ள பாராளுமன்ற ஜனநாயக முறையின் ஒவ்வொரு அம்சமும் எம்மால் ஏற்றுக்கொள்ளபடவேண்டிய அவசியம் ஏதும் இருப்பதாக நாம் கூறவில்லை. அதேசமயம், சோஷலிச இலங்கையினுல் பயனுள்ள முறையில் பின்பற்றக்கூடிய பல நல்ல அம்சங்களும் அந்த அரசியல் முறைகளில் உள்ளன என்பதனை நாம் கூறிவைக்க விரும்புகிறேம்.

உதாரணமாக, மக்களின் இரக்சிய வாக்களிப்பின்மூலம் ஒரு நாட்டின் அரசாங்கத்தைத் தெரிவுசெய்யும் அரசியல் முறை, பல்வேறு அரசியற் கட்சிகளும் தத்தமது கொள்கைத் திட்டங்களை மக்கள் முன் வைப்பதன்மூலம் அதிகாரத்திற்கு வருவதற்கு அக்கட்சிகளுக்கு உள்ள வாய்ப்பு ஆகிய அம்சங்களுக்கு, இலங்கையின் எந்தவொரு ஜனநாயக அரசியலமைப்பிலும் இடமளிக்கப்படல் வேண்டும். எவ்வாருயினும், இதுவரையில் எவருமே பொருத்தமானதொரு அரசியல் அமைப்பினை முன்வைக்கவில்லை.

1972 ஆம் ஆண்டில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியலமைப்பு நிருணயசபையினுல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை அப்போதைய அமைச்சரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஆக்கினுர். இந்த அரசியலமைப்புச்சட்டம் குறைபாடுகளே இல்லாததெனநாம் கூறவில்லை. ஆனுல், இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு வாசகமும், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நன்கு அலசி ஆராயப்பட்ட பின்னரே நிறைவேற்றப்பட்டது. அத்துடன், ஜனநாயகப் பண்புகளைப் பாதுகாப்பதில் இயன்ற வரையில் கவனம் செலுத்தப்பட்டது. ஆனுல், தற்போது நடைமுறையிலுள்ள 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சட்டமோ, அருவருக்கத்தக்கதான அவசர கோலத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதுடன், ஜனதிபதியிடம் எல்லையற்ற அதிகாரங்களையும் குவித்து அதற்குமேலாகப் புதுப்புது சட்டங்களையும் புகுத்தி, சர்வாதிகார அரசாங்கமொன்றை அமைப்பதற்கும் வழிவகுத்துள்ளது. பல்வேறு முக்கியமான மாற்றங்களை கொண்டுவருவதன்மூலம் இந்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஜனநாயகத் தன்மையை அளித்தல் அதிமுக்கியமாகும்.

எம்மை இன்று எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சிறந்தவழி மேற்சொல்லப்பட்ட சமூக-பொருளாதார, அரசியல் மாற்றங்களைச் செய்வதும், உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களில் சுயநிர்வாக முறையைப் புகுத்தலும், அத்துடன் இந்த சுயநிர்வாகக் கொள்கையை இயன்றவரையில் இதர அரசுத்துறை நடவடிக்கைகளுக்கு விஸ்தரிப்பதுமாகும். எல்லா மட்டத்திலும் மக்களின் வருங்கால சுபீட்சத்துக்கு அவர்களையே எஜமானர்களாக்குவதன்மூலம் உண்மையான ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான வழி திறந்து விடப்படும்.

## சமசமாஜ பேரியக்கத்தின் அனுபவம்

1964 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் லங்கா சம சமாஜக் கட்சி கூட்டரசாங்கம் அமைத்தது தெரிந்ததே. அப்போது இவ்விரண்டு கட்சிகளும் செய்துகொண்ட வேலைத்திட்டத்தில் இடம் பெற்ற அம்சங்களில் ஒன்று, அரச உற்பத்தி நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய ஊழியர் சபைகள் தேர்ந்தெடுக்கப்பட வேணடும் என்பதாகும்.

அத்தகைய மன்றங்களை அமைப்பதற்கான ஒரு தீர்மானத்தை தேசியமய சேவைகள் அமைச்சர் அனில் முனசிங்கா கொண்டு வந்தார். ஆனுல், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தந்திரசாலியான அமைச்சர் ஒருவர், இதுபற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிரந்தர செயலாளர்களின் குழுவொன்றை நியமிக்கும்படி அமைச்சரவையைச் சம்மதிக்கச் செய்த-தன் மூலம், ஊழியர் மன்றம் அமைக்கும் யோசனையை வெற்றிகரமான முறையில் நாசம் செய்துவிட்டார். 1970 ஆம் ஆண்டு, ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டபோது, அதில் போக்குவரத்து அமைச்சராக பதவியேற்ற லெஸ்லி குணவர்தனு, மேற்சொன்ன துரதிருஷ்டவசமான அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். அவர், ஊழியர் சபை அமைப்பு விடயமாக, கைத்தொழில் அமைச்சர் திரு. டி, பி. சுபசிங்காவுடன் சேர்ந்து அமைச்சரவை அறிக்கையொன்றை சமர்ப்பித்தார் அவ்வறிக்கை அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சுயநிர்வாக முறையை இறுதியாகத் தாபிக்கும் வகையில், அரசு நடத்தும் உற்பத்தி நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய ஊழியர் சபைகளை நிறுவுவதற்கு அதிகாரம் பெறப்பட்டது. அத்துடன், அடையாளபூர்வமான அமைப்பு விதிகளும் நிறைவேற்றப்பட்டன. ஊழியர் சபைகளை சுணக்காமல் நிறுவும் வகையில், அமைப்பு விதிகளில் ஏற்ற மாற்றங்களைச் செய்யும் அதிகாரமும் அமைச்சர்களுக்கு அளிக்கப்பட்டது.

ஊழியர் சபைகளுக்கு அளிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகா-ரங்களில் இரண்டினைப்பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். நிருவாகிகள் தமது பொறுப்பில் உள்ள நிறுவனத்தில் அல்லது சேவையில் ஏதேனும் புதுமையைப் புகுத்துவதற்கு முன்னர் அல்லது மாற்றத்தைச் செய்வதற்கு முன்னர் ஊழியர் சபையின் சம்மதத்தைப் பெறல் கட்டாயமாக்கப்பட்டது. இவ்வாருன சம்மதமின்றி, நிருவாக உத்தேச மாற்-றத்தைச் செய்யவியலாது. இவ்வாறில்லையெனின் அமைச்சருக்கு விண்ணப்பித்து, அவர் இருதரப்பினரையும் விசாரித்தபின்னர் தரும் இறுதி முடிவுக்கமையவே செய்தல் வேண்டும்.

ஊழியர் சபைக்கு இன்னெரு அதிகாரமும் வழங்கப்பட்டது. இது நிறுவனம் சம்பந்தப்பட்ட எவ்விடயம் குறித்தும், குழுவொன்றை அமைத்து விசாரிப்பதற்கு உள்ள அதிகாரமாகும். விசாரணை நடத்தும் அத்தகைய குழுவுக்கு இயன்ற எல்லாவிதமான உதவியும் அளிக்கும் கடப்பாடும் நிருவாகத்துக்கு உண்டாக்கப்பட்டது.

உத்தேச ஊழியர் சபைகளுக்கு சர்வ அதிகாரங்களும் வழங்கப் படவேண்டுமென இலங்கை சமசமாஜக் கட்சி அச்சமயத்தில் ஏன் கோர வில்லை என்ற கேள்வியும் எழும்பலாம். அவ்வாறு கோரப்படாமைக்கு இரண்டு காரணங்கள் உள. முதலாவது, அச்சமயத்தில் தொழிலாளர் கள் அந்தளவு உணர்ச்சியும், பக்குவமும் பெற்றிருக்கவில்லை. இரண்டா வது, அத்தகைய யோசனைக்கு சுதந்திரக் கட்சியிடமிருந்து குறிப்பிடத் தக்க, முக்கியமான வட்டாரங்களிலிருந்து ஆதரவைப் பெற்றிருக்க முடி யாது.

நிருவாக நடவடிக்கைகளின் மூலம் அல்லாமல், பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம், ஊழியர் சபைகள் உருவாக்கப் படவேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பத்திலேயே ஏன் கோர வில்லை என்ற இன்னொரு கேள்வியும் எழும்பலாம். இதற்கான நேரடிக் காரணம் உண்டு. பாராளுமன்ற சட்ட நடவடிக்கையின்மூலம் ஊழியர் சபை அமைப்புக்கு நாம் முற்பட்டிருப்போமேயானல் அதற்குப் பல ஆண்டுகள் பிடித்திருக்கும். இயன்றளவு விரைவில் இம்மன்றங்களை அமைப்பதே அப்போதைய முக்கிய பணியாகவிருந்தது.

1970 ஆம் வருட தேர்தல் வெற்றியை அடுத்து உடனடியாகவே, இலங்கைப் போக்குவரத்துச் சபையிலும், கைத்தொழில் அமைச்சுக்கு கீழான நிறுவனங்களிலும் ஊழியர் சபைகள் அமைக்கப்பட்டன. இவை உரியமுறையில் தெரிவு செய்யப்பட்டவை அல்ல. ஆகவே, காலக்கட்டத் தில் தாமாகவே மடிந்துவிட்டன. ஆகவே, அச்சமயத்தில், தொழிலாளர் களின் உற்சாகமும், உணர்ச்சியும் மறைவதற்கு முன்னரே ஊழியர் சபை களை அவசர அவசரமாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியான சம்பவமாக, 1970 ஆம் ஆண்டு இலங் கைப் போக்குவரத்துச் சபையில் முதலாவது தெரிவுசெய்யப்பட்ட ஊழி யர் சபை உதயமாகியது. இதனை அடுத்து, கைத்தொழில் அமைச்சு, கப் பற் போக்குவரத்து அமைச்சு, தேசிய வீடமைப்பு அமைச்சு, பெருந் தோட்ட தொழிற்துறை அமைச்சு என்பவற்றின் கீழும் ஊழியர் சபைகள் உருவாகின. இச்சபைகள் யாவும் ஊழியர்களின் இரகசிய வாக்கெடுப் பின்மூலமே தெரிவுசெய்யப்பட்டன.

இவ்வாறு நியமிக்கப்பட்ட சபைகளில் பெரும்பாலானவை, வெற்- றிகரமாகச் செயல்பட்டன. உதாரணமாகப் புகையிரதப் பகுதியில் இயங் கிய ஊழியர் சபைகளினல், உருப்படியான காரியங்கள் பல செய்யப்பட் டன. உள்ளூரிலேயேரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் வேலை தொடங்கப் பட்டது. பெட்டிகளில் விளக்கேற்றும் புதிய முறை புகுத்தப்பட்டது. தன் னியக்கக் கதவுகள் பொருத்தப்பட்டன. இவற்றை தவிர வேறுபல புதிய நவீன கண்டுபிடிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பல்வேறு சீர்திருத்தங்களும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளும், ஊழியர் சபைகளினுலேயே அறிமுகப் படுத்தப்பட்டன. இதில், மிகயூதியம் வழங்கயில் கையாளப்பட்ட புதிய முறை குறிப்பிடத்தககதாகும். இதன்படி ஒவ்வொரு டிப்போவையும் சேர்ந்த ஊழியர்களுக்கும் அவர்கள் பணியாற்றும் திறமையின் சமவீத அளவின் அடிப்படையிலேயே மிகையூதியம் அளிக்கப்பட்டது. இது சுய நிர்வாகத்துமுறைக்கு வழிகோறுவதாகும். அதாவது, தொழிலாளர்கள் தம்மால் சம்பாதிக்கப்பட்ட இலாபத்தை தாமே எவ்வாறு பயனுள்ள வகையில் கையாளமுடியும் என்பதனைப் புகட்டுவதாகும். ஊழியர் சபை உறுப்பினர்களுக்கு நிருவாகத்துறையில் போதனையும், பயிற்சியும் அளிப் பதற்கான ஒரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது.

அதேசமயம், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சபைகளின் விடயத்தில் பாதகமான அம்சங்களே இல்லையென நாம் கூறவில்லை. உதாரணத்துக்கு, ஊழியர் சபை உறுப்பினர்கள் தெரிவில் தகுதியும், திறமையும் கவனிக்கப்படவில்லை. பல்வேறு தொழிற் சங்கங்கள் சமர்ப்பித்த பெயர்ப் பட்டியலின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெற்றன. இவ்விடயத்தில் அமைச்சர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள் ஆகியோரின் அறிவுரைகளும் கவனிக்கப்படவில்லை. அதேசமயம், ஊழியர் சபைகளுக்காக நடைபெற்ற இரண்டாவது தேர்தலில் இவ் விடயமாக ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது.

இருநூறு ஊழியர் சபைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மூன்று நாள் கருத்தரங்கு ஒன்று, 1975 ஜனவரி 2 ஆம் தேதியன்று, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கு மிகவும் கவனமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்குபற்றிய தொழிலாளர்கள் பாராட்டப்படக்கூடியளவுக்கு உற்சாகமும், ஆர்வமும் காட்டினார்கள். கருத்தரங்கின் மூன்றாவது நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அமைச்சரவை அறிக்கையாக தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஐந்து அமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அவ்வருடம் பிற்பகுதியில், அரசாங்கத்திலிருந்து இலங்கை சமசமாஜக் கட்சி அமைச்சர்கள் மூவரும் வெளியேறியபின்னர், இவ்விடயமாக மேற்கொண்டு எதுவுமே செய்யப்படவில்லை.

ஊழியர் சபைகள் விடயமாக இலங்கையின் அனுபவத்திலிருந்து, இரண்டு முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். முதலாவதாக, தொழிலாளர்களின் உற்சாகமும், ஆர்வமும் கரைந்துபோவதற்கு முன்னரே சுயநிர்வாக முறை தாபிக்கப்பட்டுவிடவேண்டும். இரண்டாவதாக பொதுத்தேர்தல் நெருங்கும் வரையில் காத்துக்கொண்டிராமல், முன் கூட்டியே இவ்விடயமாகக் கல்வியூட்டும் தன்மையிலான பிரச்சார நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்

தற்போதைய யூ. என். பி. கட்சி அரசாங்கம் ஊழியர் சபைகளை நிறுவுவதற்கான ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளதுடன், அதனை அமுலாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. ஆனால், இந்த நடவடிக்கை, முன் செல்லும் காரியமாக அல்லாமல் பின்னோக்கிச் செல்லும் காரியமாக அமைந்திருப்பது வருத்தத்திற்குறியதாகும். முதலாவதாக, இச்சபைகளுக்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட சபைகள் பெற்றிருந்ததைப்போன்ற வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள்தானும் கிடையாது. இவை, வெறுமனே அறிவுரை-அதுவும் தொழிலாளர்களின் பாதுகாப்பு சம்பந்தப் பட்டமட்டில் மட்டும்- கூறும் மன்றங்களாகவே இயங்கும். அதேசமயம், மிகவும் ஆபத்தான ஒரு அம்சம் இச்சட்டத்தின் 38 (4) ஆம் பிரிவில் அடங்கியுள்ளது. இதன்படி, கைத்தொழில் பிணக்கு உட்பட ஏதேனும் ஒரு விடயத்தின் மீது ஊழியர் சபைக்கும் நிருவாகத்துக்குமிடையில் இணக்கம் ஏற்படுமாயின், அது சம்பந்தப்பட்ட எல்லாத் தொழிலாளர்களையும் கட்டுப்படுத்தும். இதனை எதிர்க்கும் ஊழியர்கள் மீது வழக்குத் தொடரமுடியும். குற்றவாளியாகக் காணப்பட்டால் ஆகக்கூடிய பட்சம் ஆயிரம் ரூபாய் அபராதத்துடன் அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாத சாதாரண அல்லது கடுஞ் சிறைத்தண்டனை அளிக்கமுடியும்.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொண்டுவந்துள்ள ஊழியர் சபை மசோதாவின் உண்மையான நோக்கம், தொழிற்சங்க இயக்கங்களுக்கு சாவுமணி அடிப்பதேயாகும், என்ற முடிவுக்கு வந்தால் அது பிழையாகாது. உதாரணமாக அரசாங்க ஆதரவுபெற்ற பிரதிநிதிகளையே பெரும்பான்மையாகக் கொண்ட ஊழியர் சபைகள் உருவாகு

மானல், அவை நிருவாகத்துடன் சேர்ந்துகொண்டு சதி செய்வதன்மூலம் சுலபமான வகையில் தொழிலாளர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாயிருக்கும். அத்தகைய சந்தர்ப்பத்தில், அப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதாயின், தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கு மாத்திரமின்றி சிறைசெல்லவும் தயாராக இருக்கவேண்டும்.

இச்சபைகளுக்கான தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி சில கட்சிகளும், தொழிற்சங்கங்களும், தமது உறுப்பினர்களுக்கு ஆலோசனை கூறின. ஆனல் சமசமாஜக் கட்சியும் அதன் கீழான தொழிற்சங்கங்களும் யூ. என். பி. அரசாங்கத்தின் மேற்படி மசோதாவில் அடங்கியுள்ள ஆபத்தை முன்கூட்டியே அம்பலப்படுத்தியதுடன், யூ. என். பி. யின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடிப்பதற்காக, வேலைத்தளங்களில் உள்ள யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகள் யாவும் ஒன்றுதிரண்டு தனியொரு வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டன. இந்த ஆலோசனை பின்பற்றப்பட்டிருக்குமானல், இதுவரையில் நடந்துள்ள ஊழியர் சபை தேர்தல்களில் யூ. என். பி. வுக்கு மகத்தான தோல்வியை உண்டுபண்ணியிருக்கமுடியும். அதிர்ஷ்டவசமாக, பகிஸ்கரிப்பு யோசனை கூறிய கட்சிகளைச் சேர்ந்த எல்லா ஊழியர்களுமே அவ்வாறு நடந்துகொள்ளாதபடியால், பல இடங்களில் நடைபெற்ற ஊழியர் சபை தேர்தல்களில் யூ. என். பி. எதிப்புச் சக்திகளால் பல வெற்றிகளை ஈட்டமுடிந்துள்ளது. பெரும்பாலான கூட்டுத்தாபனங்களில் அவை அதிகாரத்தைக் கைபற்றியுள்ளன.

மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீது அடிக்குமேல் அடி கொடுக்கப்படும் ஒரு காலக்கட்டத்தில் நாமிருக்கிறோம். மக்களை இப்போது அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமானல், மோசமாகிவரும் அவர்களது நாளாந்த பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய நல்லதோர் வேலைத்திட்டத்தை உருவாக்கவேண்டும். அத்தகைய திட்டத்தைக் கொண்டு நடத்தக்கூடிய ஒரு அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்துவதனைத் தவிர நாட்டுக்கு வேறு வழி கிடையாது. மக்களை நசுக்கி வருத்தும் மோசமான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதேசமயம், அவர்களினல் ஏற்கனவே வென்றெடுக்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளையும், சலுகைகளையும் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகள் அடங்கிய ஒரு வேலைத்திட்டத்தை லங்கா சமசமாஜக் கட்சி முன்வைத்துள்ளது.

இது, ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்ப்பதாகக்கூறும் எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு சவாலாக அமைகிறது. எமது வேலைத்திட்டங்கள் பொருத்தமற்றவை எனின், பொருத்தமான மாற்றுத் திட்டங்களை முன்வைத்தல் அக் கட்சிகளின் கடமையாகும். அதே வேளையில் நாம் முன்வைத்துள்ள வேலைத்திட்டமானது, யூ. என். பி. யினல் தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாக உணருகின்ற எல்லாரினலுமே தீவிரமாக ஆராய்ந்து பார்க்கவேண்டிய ஒன்ருகும்.

குறுகிய கட்சி நலன்களுக்கும், சுயநலமிக்க அதிகார ஆசைகளுக்கும், பதவி வேட்கைகளுக்கும் அப்பாட்பட்ட நிலையில், லங்கா சமசமாஜக் கட்சியினல் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டம், நாம் மேலே குறிப்பிட்ட எல்லா பிரிவினராலும் தீவிரமான முறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதுவே எமது வேண்டுகோளும் ஆகும்.!

அச்சுப்பதிவு:
மேர்சி அச்சகம், கொழும்பு - 15.
தொலைபேசி: 5 9 0 3 3 2